## 12

# சிலுவை: அதன் மையம்

*நாளின் மதிய நேரத்தில் இருள், வழக்கத்துக்கு மாறான இருள் - மரணத் தொடுகையுடனான இருள், கொல்கொதாவின் மரணத் தழுவல் காட்சியை தேவன் பார்க்க விரும்பாததுபோல் வந்த இருள். ஏங்கி அழும் குழந்தைகளோடு, கூடியிருந்த கூட்டம், வீடுகளுக்குத் திரும்பியிருந்தன. மூன்று சிலுவைகளோடும் போர்ச்சேவகர்கள் மட்டுமிருந்தனர். ஒரு சிலுவையின்மேல் ஒரு குற்றவாளி தொங்கிக் கொண்டிருக்கிறான், உபத்திரவங்களினால் முகம் உருமாறி, வலியால் துடித்து அழுகையுடன், தனது விதியை நினைத்து சபித்து, தனது அறியாமையினால் புரட்சி பண்ணி, மத்தியில் நிற்கும் சிலுவையைப் பார்த்து விரும்பத்தகாத வார்த்தைகளால் திட்டிக் கொண்டிருக்கிறான். இன்னொரு புறம் வேறொரு குற்றவாளி, ஆச்சரியப் படத்தக்கவகையில் தன் முயற்சியில் தோல்வியுற்று எப்படியோ சமாதானத்தோடு, மரணத்துக்கு காத்துக் கொண்டிருக்கிறான். மத்தியில் இருக்கும் சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்தவர் தலையில் முள்முடி தரித்தவராய், முகத்தில் மிகுந்த வேதனையோடு காட்சியளிக்கிறார். அவர் நரம்புகளில் கடுமை ஏற்பட்டு மிகுந்த உரத்தசத்தமாய் அழுது, "என் தேவனே, என் தேவனே, ஏன் என்னை கைவீட்டீர்?" என்று கேட்டுக் கொண்டிருக்கிறார் (மாற்கு 15:34). பரலோகத்திலிருந்து எந்த பதிலும் வரவில்லை. நிமிடங்கள் கரைகிறது, இறுதியாக, உள்ளுணர்வில் உறுதியடைந்து நம்பிக்கையுடன், தம் கண்களை ஏறெடுத்து, சொன்னது, "பிதாவே உமது கரங்களில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்" என்றார் (லூக்கா 23:46), பிறகு மரித்தார்.*

இயேசுவின் சிலுவை அன்று கொல்கொதாவில் நடுவில் நின்றது, இன்றும் அவருடைய சிலுவை மரணம் மையம் வகிக்கிறது. மனித வாழ்வின் நாடகத்தில் இயேசு மேடையின் நடுவில் நிற்கிறார். அவருக்கு முன்பு நடந்த சம்பவங்கள் யாவும் அவருடன் சம்பந்தப்படுத்தி தேதியிடப்பட்டிருக்கின்ற - "கி.மு.," "கிறிஸ்துவுக்கு முன்."[1] அவிசுவாசிகளும் தங்கள் கடிதங்களில், "நம்முடைய கர்த்தருடைய ஆண்டான 2011" என்று தேதியிடுகின்றனர், இது லத்தீன் பாஷையில் ("கி.பி.") "A.D." *அன்னோ டோமினி* எனப்படுகிறது.

கிறிஸ்துவின் ஜீவியத்தில், சிலுவை மையம் வகித்தது. அவர் "இயேசு" என்று பெயரிடப்பட்டார், ஏனெனில் அவர் இரட்சகராயிருப்பார் என்பதால் அப்பெயரிடப்பட்டது, ஆகிலும் அவர் மரித்தபோதுதான் இரட்சகரானார். தமது ஊழியத்தின் துவக்க நேரத்திலேயே அவர் "உயர்த்தப்படுவார்" என்று சொன்னார் (யோவான் 3:14). அப்பொழுது எல்லாரையும் தாம் இழுத்துக் கொள்வதாகக் குறிப்பிட்டார். அவர் சிலுவையின்மேல் மரிப்பதைக் குறித்து அப்படிச் சொன்னார். இயேசு மரிப்பதற்காக பிறந்தார். அவர் முன் மாதிரியாக வாழ்ந்து காட்டி, நாம் எப்படி வாழவேண்டும் என்று போதித்தார். ஆனால் அவருடைய பூமிக்கு வந்ததன் தலையாய நோக்கம் நமது பாவங்களுக்காக மரிப்பதுதான்.

*சிலுவை இயேசுவின் வாழ்க்கையில் மைய நிகழ்ச்சியாக இருக்கிற, அது எல்லா வரலாற்றிலேயும் மைய உருவகம் கொண்டது! அலெக்ஸாண்டர் மேக்லாரன், "கிறிஸ்துவின் மனித அவதாரமும், நம்முடைய கர்த்தராகிய அவருடைய சிலுவை மரணமும் சகல யுகங்களின் சுழற்சியின் நிகழ்ச்சிகளில் முக்கியமான செய்தியாகும்," என்று சொன்னதில் வியப்பொன்றுமில்லை. கிறிஸ்தவ மார்க்கத்துக்கு சிலுவைதான் அதேபோல மையமானது.*

## வேதாகமத்தின் மைய வரலாறு

வேதபுத்தகம் உண்மையில், ஒரு புத்தகம் என்றே பொருள்படும். அது, அதன் பெயருக்கேற்றாற்போல், "புத்தகம்" என பொருள்படுகிறது. *வேதபுத்தகம் ஒரே மையக் கருத்தைக் கொண்டது. அது ஒரு கதையைத்தான் சொல்லுகிறது.* அதன் மையக்கருத்து மனித வர்க்கத்தின் மீட்பு, இதன் முதன்மை நாயகன் கிறிஸ்து, அதன் பிரதான நிகழ்ச்சி சிலுவையிலறையப்படுதல்.

வேதபுத்தகத்தின் திறப்பு அதிகாரம் மனிதன் சிருஷ்டிக்கப்பட்டு பரதீஸிலே வைக்கப்பட்டான் என்று அறிவிக்கிறது. மனிதன் பாவம் செய்தான், ஆதலால் பிறகு ஏதேன் தோட்டத்திலிருந்து விரட்டப்பட்டான், அவனுடைய மீட்பைக் குறித்த நெடியக் கதை - மனிதனை மீட்டு மீண்டும் தம்மோடு சேர்த்து கொள்ளும் கதை - துவக்கம் பெற்றது. நீதியுள்ள நோவாவை தேவன் ஜலப் பிரளயத்திலிருந்து பாதுகாத்து இரட்சித்தார். தேவன் ஆபிரகாமை அழைத்தார், அவரின் சந்ததி மூலமாக பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும் என்று சொன்னார். ஆபிரகாமின் சந்ததிகளை தேவன் பாதுகாத்து, கடைசியாக அவர்களிலிருந்து தேவன் ஒரு தேசத்தை எழுப்பினார் -இஸ்ரவேலராகிய, எபிரெயர்கள் மூலம் - ஆபிரகாமுக்கு கொடுத்த வாக்குத்தத்தத்தை நிறைவேற்றினார். அவர் இந்த தேசத்துக்கு ஒரு பிரமாணத்தைக் கொடுத்து கிறிஸ்து வரும்வரை பாதுகாத்தார், மரிப்பதற்காக அவர் ஒரு கன்னிகையினிடத்தில் பிறந்தார். கிறிஸ்துவின் அடக்கம் உயிர்த்தெழுதல் மற்றும் பரத்திற்கு ஏறுதலுக்குப் பின் சபை ஸ்தாபிக்கப்பட்டது. சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டது. ஜனங்கள் இரட்சிக்கப்பட்டு கிறிஸ்துவின் சபையிலே சேர்த்துக்கொள்ளப் பட்டார்கள். பிறகு, புதிய ஏற்பாட்டு நிருபங்கள் மூலம் எப்படி வாழ வேண்டும் என்று கிறிஸ்தவர்களுக்கு போதிக்கப்பட்டது. இறுதியாக, யோவான் வருகின்ற யுகங்களைப் பற்றிய தரிசனம் கொடுக்கப்பட்டார். வெளிப்படுத்தின விசேஷப் புத்தகம் மனித வர்க்கம் மீட்கப்படுவதையும், தேவனோடு மீண்டும் ஐக்கியமாவது, அவன் விழுந்த இடத்திலிருந்து மீண்டும் உயர்ந்த ஸ்தானத்துக்கு வருவது குறித்தும் தரிசனத்தின் மூலம் கொடுக்கப்பட்ட செய்தியாக இருந்தது. வேதாகம கதை இப்படிப் பட்டதாயிருக்கிறது.

*சிலுவையின் கதை ஆரம்பத்திலிருந்து இறுதிவரை முதன்மையாக அறிவிக்கிறது:*

- *அது (சிலுவை) தான் சர்ப்பம் அவருடைய கால்களை நசுக்கினாலும், ஸ்திரீயின் வித்தாகிய அவர் அவன் தலையை நசுக்குகின்ற கருவி (ஆதியாகமம் 3:15).*
- *ஆபிரகாமின் சந்ததி மூலம் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப் படுவதற்கு இதுதான் கருவி.*

- *மிருக பலிகளை நிழலாக ஆசரித்த (உண்மையான) நிஜமான காட்சி இதுதான். பழைய உடன்படிக்கையின் கீழ் அடிக்கப்பட்ட ஒவ்வொரு ஆட்டுக் குட்டியும் தேவ ஆட்டுக் குட்டியானவர் எல்லா ஜனங்களின் பாவங்களுக்காக - பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலுமாக - அடிக்கப்படுவார் என்பதை படம் பிடித்துக் காட்டியது.*
- *அது பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசனங்களின் நிறைவேற்றமான கிறிஸ்து, "நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு," "நமது அக்கிரமங்களினிமித்தம் நொறுக்கப்பட்டார்," என்று ஏசாயா எழுதின போது அவர் சிலுவையைப் பற்றியே பேசினார்.*
- *கிறிஸ்துவின் ஜீவியத்தின் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்று இது. சுவிசேஷ பதிவேடுகளை எழுதினவர்கள் இயேசுகிறிஸ்துவின் பூமிக்குரிய ஊழியத்தின் கடைசி ஒருவார நிகழ்ச்சிகளை மற்ற எல்லா நிகழ்ச்சிகளைக் காட்டிலும் அதிகமாக விவரிக்க கூடுதல் அதிகாரங்களை எடுத்துக் கொண்டனர்.*
- *அது புதிய ஏற்பாட்டு சுவிசேஷகர்களின் செய்திக்கான பாரமும் புதிய ஏற்பாட்டு இரட்சிப்பின் முக்கிய மூலாதாரமும் இதுவே.*
- *அதுவே பரலோகத்தில் நுழைவதற்கான வழி. வெளிப்படுத்தின விசேஷம் திரளானவர்கள் இரட்சிக்கப் படுவார்கள் என்றும், அவர்கள் எல்லோரும் வெண்ணங்கி தரித்து, ஆட்டுக்குட்டியானவரின் சிங்காசனத்தைச் சுற்றிலுமிருந்து, தேவனை இரவும் பகலும் துதிப்பார்கள் என்று முன்னுரைத்தது. யார் அவர்கள்? பதில் கொடுக்கப் பட்டுள்ளது: "இவர்கள் மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள்; இவர்கள் தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள்" (வெளிப்படுத்தின விசேஷம் 7:14).*

*வேதாகம கதையின் ஆரம்பத்திலிருந்து கடைசி வரைக்கும் சிலுவை மையம் வகிக்கிறது.*

## நமது சுவிசேஷ பிரசங்கத்தின் இருதயமாயிருப்பது (சிலுவை)

*புதிய ஏற்பாட்டின் நாட்களில், சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ணுவதற்கு சிலுவை மையம் வகித்தது. பெந்தெகோஸ்தே நாளில், பேதுரு தமது பிரசங்கத்தை முடிக்கிறபோது, இயேசுப் பற்றிச் சொல்லி, "ஆகையால், *<u>நீங்கள் சிலுவையில் அறைந்த</u>* இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினாரென்று இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் நிச்சயமாய் அறிக்கடவர்கள்" என்றான் (நடபடிகள் 2:36; வலியுறுத்துதல் என்னுடையது). பவுல் கொரிந்தியர்களுக்கு எழுதினார், "இயேசு கிறிஸ்துவை, *<u>சிலுவையிலறையப்பட்ட அவரையேயன்றி</u>*, வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித்திருக்கிறேன்" (1 கொரிந்தியர் 2:2; வலியுறுத்தல் என்னுடையது).*

*நாமும் கூட, நமது பிரசங்கத்தின் முன்னணியாக சிலுவையை முன்வைப்பதை நிச்சயப்படுத்திக் கொள்ளவேண்டும். இதன் பலன் இரண்டு மடங்கானவை. (1) நாம் இரட்சிப்பின் செய்தியை பிரசங்கிக்கக்*

*கூடும். "சிலுவையைப்பற்றிய உபதேசம் கெட்டுப் போகிறவர்களுக்கு பைத்தியமாயிருக்கிறது, இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவபெலனாயிருக்கிறது" (1 கொரிந்தியர் 1:18). (2) நாம் செயல்படுத்தத்தக்க செய்தியை பிரசங்கிக்கலாம். பேதுரு பெந்தெகோஸ்தே நாளில் சிலுவையைக் குறித்து பிரசங்கித்த பின்பு, அவருடைய செய்தியைக் கேட்டுக் கொண்டிருந்தவர்களுடைய "இருதயம் குத்தப்பட்டவர்களாகி, பேதுருவையும் மற்ற அப்போஸ்தலரையும் பார்த்து, சகோதரரே, நாங்கள் என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டார்கள் (நடபடிகள் 2:37). சிலுவையைப் பற்றிய உபதேசம் அவர்களுடைய பாவங்களை உணர்த்தியது. அவர்கள் கீழ்ப்படிதலுக்கு இயக்கப்பட்டார்கள். இன்றும் சிலுவையைப் பற்றிய உபதேசம் அதே விதமான தாக்கத்தை ஏற்படுத்தும்.*

*"சிலுவையைப் பற்றிய உபதேசம்" என்பது என்ன? அது இயேசுவின் சிலுவை மரணத்தைப் பற்றிய கதையைச் சொல்லி விடுவது, ஆனால் அது மட்டுமல்ல. அது சிலுவையோடு சம்பந்தப்பட்ட அனைத்தையும் சொல்லுவது: கர்த்தருடைய பந்தி, ... ஞானஸ்நானம் ... சபை ... புதிய உடன்படிக்கை.*

*சிலுவையைப் பற்றி பிரசங்கிப்போம்! நமது செய்தியின் மையமாய் இதையே வைத்துக்கொள்வோம்! சிலுவையோடு சம்பந்தப்பட்ட எல்லாவற்றையும் பிரசங்கிப்போம்; மேலும், நாம் அப்படிச் செய்யும்போது, அது சம்பந்தப்பட்டக் காரியங்களைத் தெளிவாக்குவோம். பவுலைப் போல, "இயேசு கிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி, வேறொன்றையும் அறியாதிருக்க தீர்மானிப்போம்."*

## நமது இரட்சிப்பின் மையம்

*வேதாகமத்தின் கதை என்பது மனிதனை மீட்பதற்கான தேவனுடைய திட்டத்தின் கதை. சிலுவைதான் அதன் மையக்கருத்து, ஏனெனில் மனிதனுடைய மீட்புக்கு தேவன் அதைப் பயன் படுத்தினார்.*

*சிலுவையைப் பற்றிய அநேக விவரங்கள் நம்முடைய இரட்சிப்பை நினைப்பூட்டுதலாய் அமைந்துள்ளன:*

- *இயேசு சிலுவையில் அறையப்படுவதற்கு முன், பரபாஸ் மரணத்தினின்று தப்பிக்கக் காரணமாயிருந்தார். நாமும் கூட, கிறிஸ்து மரித்ததினாலே மரணத்தினின்று தப்பித்துக் கொள்ள முடியும்.*
- *இயேசு அழுது, "பிதாவே இவர்களை மன்னியும்" தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே என்றார் (லூக்கா 23:34), அவர்களைப்போல நம்மையும் மன்னிக்க நமது இரட்சகர் சித்தமுள்ளவராயிருக்கிறார் என்பதை இது நமக்கு நினைப்பூட்டுகிறது.*
- *கள்ளனைப் பார்த்து, இயேசு "இன்றைக்கு நீ என்னுடனே கூட பரதீசிலிருப்பாய்" என்றார் (லூக்கா 23:43). நாம் விசுவாசத்தோடும் கீழ்ப்படிதலோடும் அவரிடத்தில் திரும்புவோமானால், அவர் நம்மையும் இரட்சிப்பார்.*
- *அவர் மரிக்கும்போது, அழுது, "பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்" என்றார் (லூக்கா 23:46). அவர் மரித்ததினால், நாமும் நம்முடைய ஆவியை நம்முடைய மரணத்தின்போது ஒப்புக்*

கொடுக்கமுடியும்.

- அவர் மரித்துக் கொண்டிருக்கும்போது, அவருடைய தலையிலிருந்தும், முதுகிலிருந்தும், அவருடைய கரங்களிலிருந்தும், அவருடைய கால்களிலிருந்தும் இரத்தம் வடிந்து கொண்டிருந்தது. இயேசு மரித்த பின், போர்ச்சேவகர் அவருடைய விலாவில் ஈட்டியினால் குத்தியபோது, இரத்தமும் தண்ணீரும் வந்தது (யோவான் 19:34). இரத்தம் தான் நம்முடைய ஆத்துமாக்களை சுத்திகரிக்கும் ஒரே முகவர்.
- இயேசு மரித்த போது, தேவாலயத்துத் திரைச்சீலை இரண்டாக கிழிந்து, கடைசியாக பரலோகத்திற்கான வழி திறக்கப்பட்டது என்று அடையாளப்படுத்தியது.

இந்த நிகழ்ச்சிகளெல்லாம் சிலுவையிலே ஏதோ சில ஆச்சரியப்படத் தக்கவைகள் நடப்பதாக அறிவித்தன. நமது இரட்சிப்பைக் கொண்டுவருவதை நோக்கமாகக் கொண்டிருந்தன சில.

சிலுவை உண்மையில் இரட்சிப்பைக் கொண்டு வந்தது. இயேசு சொன்னார், ''இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய இரத்தமாயிருக்கிறது'' (மத்தேயு 26:28). பவுல் குறிப்பிடுகையில், "இப்படி நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்க, கோபாக்கினைக்கு நீங்கலாக அவராலே நாம் இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே" (ரோமர் 5:9); "அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது" (எபேசியர் 1:7) என்று எழுதினார்.. "தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களை கழுவினார்" என்று யோவான் அறிவித்தார் (வெளிப்படுத்தின விசேஷம் 1:5), மற்றும் இரட்சிக்கப்பட்டவர்கள் "தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள்" (வெளிப்படுத்தின விசேஷம் 7:14).

கிறிஸ்துவின் இரத்தத்தினாலே நாம் எப்பொழுது இரட்சிக்கப்படுகிறோம்? ஒரு பாடலின் வார்த்தைகளிலே அந்த நேரம் நன்கு விவரிக்கப்படுகிறது:

> இம்மானுவேலின் இரத்தத்தால் நிறைந்த ஊற்றுண்டே
> எப்பாவத் தீங்கும் அதினால் நிவிர்த்தியாகுமே.[2]

பெந்தெகோஸ்தே நாளில் சுவிசேஷ செய்திகளைக் கேட்ட போது அந்த குற்றவாளிகள் பதில் செயல் செய்தது போல நாமும் ஏற்று முன்வரும்போது கிறிஸ்துவின் இரத்தத்தினாலே இரட்சிக்கப் படுகிறோம். அவர்கள் மன்னிக்கப்படும்படியாக கிறிஸ்துவும் ஜெபித்தார். ஆயினும், பெந்தெகோஸ்தே எனும் நாள் வந்த போது, கிறிஸ்துவின் மரணத்துக்குப் பிறகு ஐம்பது நாட்கள் கழித்தும் அவர்கள் இன்னும் மன்னிக்கப் படவில்லை; அவர்கள் இன்னமும் கிறிஸ்துவை கொலைசெய்த குற்றமுள்ளவர்களாயிருந்தனர். அவர்கள் சத்தமிட்டு, "நாங்கள் என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டு கிறிஸ்துவின் இரத்தத்தினால் கிடைக்கும் இரட்சிப்பைத் தேடினார்கள். அவர்கள் "கிறிஸ்துவின் இரத்தத்தினால் நாங்கள் எப்படி சுத்திகரிக்கப்பட முடியும்?" என்று கேட்டார்கள்.

பேதுரு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக ''நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே

*ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்'' என்றார் (நடபடிகள் 2:38). இந்த பாவிகள் விசுவாசித்திருந்தார்கள். அடுத்ததாக, அவர்கள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே பாவமன்னிப்பைப் பெறுதவற்கு மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற வேண்டியதாயிருந்தது.*

*இது ரோமர் 6:3, 4 உடன் நன்றாக ஒத்துப்போகிறது:*

> *… கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு அவருடைய மரணத்துக்குள்ளாகும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம் பண்ணப்பட்டோம்.*

*நாம் கிறிஸ்துவின் மரணத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டோம், அவருடைய மரணத்துக்குள்ளாக இரட்சிக்கப்பட்டோம். ஞானஸ்நானத்திலே எழுப்பப்படுவோமாகில், நாம் புதிதான ஜீவனை அனுபவிக்கத் துவங்குகிறோம். எனவே, நிச்சயமாக, ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்தினாலே இரட்சிக்கப்படுவதற்கு ஞானஸ்நானம் அவசியமானது.*

*நடபடிகள் 22:16ல் சவுலிடம் அனனியா சொன்னார், "நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு.'' கிறிஸ்துவின் இரத்தத்தினாலே பாவங்கள் கழுவப்படும் என்பதால், அப்படிக் கழுவப்படுவதற்கு ஞானஸ்நானம் ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்துடன் அவசியமான பகுதியாக இருக்கிறது (வெளிப்படுத்தின விசேஷம் 1:5;* KJV*).*

*ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்தினாலே நீங்கள் எப்படி இரட்சிக்கப்படக்கூடும்? இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினாலே இரட்சிக்கப்படுவதற்கு புதிய ஏற்பாட்டின் ஆதி நாட்களில் மக்கள் என்ன செய்தார்களோ அதையே நாமும் செய்வதால்: அவர்கள் கிறிஸ்துவை விசுவாசித்தார்கள், பாவமன்னிப்பிற்கென்று மனந்திரும்பி, தங்களுடைய விசுவாசத்தை அறிக்கை செய்தனர், பாவமன்னிப்பிற்கென்று ஞானஸ்நானமும் பெற்றுக் கொண்டார்கள். ஞானஸ்நானத்திற்குப் பிறகே - ஒருபோதும் ஞானஸ்நானத்துக்குமுன் அல்ல - இயேசுவின் மரணத்தால் வரும் நன்மைகளைப் பெற்றனர்.*

## நமது வாழ்வை ஒருமுகப்படுத்தி நோக்கவேண்டியது

*இயேசு தமது போதனையில் சிலுவையை மிகப் பெரிதாக வலியுறுத்தினார். அவர் சொன்னார், "ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்'' (மத்தேயு 16:24). ஆதிக் கிறிஸ்தவர்கள் தங்கள் சிலுவையை இயேசுவின் சிலுவையோடு சமப்படுத்தினர். அவர்கள் "கிறிஸ்துவுடனே கூடச்*

சிலுவையில் அறையப்பட்டேன்; இனிநான் அல்ல,'' ''கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்'' (கலாத்தியர் 2:20அ) என்றனர். அவர்கள், ''உலகத்தை கலக்குகிறவராயிருந்தார்கள்'' (நடபடிகள் 17:6; KJV) ஏனெனில் சிலுவை அவர்களுடைய இருதயங்களில் பற்றியெரிகிற அக்கினியாயிருந்தது, அது அவர்களை வைராக்கியத்துடனும் தேவபக்தியுடனும் பற்றியெரியச் செய்தது.

*சிலுவை அவர்களுடைய வாழ்க்கையில் மையம் வகித்தபடியால், அவர்கள் பரிசுத்தத்தை மதித்தனர்.* அவர்கள் "உலகத்தில் கறைபடாதவர்களாய்" தங்களைக் காத்துக்கொள்ள தேடினார்கள் (யாக்கோபு 1:27; KJV). அவர்களுடைய ஆத்துமாக்கள் கிறிஸ்துவின் இரத்தத்தினால் சுத்திகரிக்கப்பட்டன; அவர்கள் தங்களை சுத்தமாய்க் காத்துக்கொள்ள விரும்பினார்கள்.

*சிலுவை அவர்களுடைய வாழ்க்கையில் மையம் வகித்தபடியால், அவர்கள் தாழ்மையோடும், கீழ்ப்படிதலோடும், ஊழியம் செய்யும் எண்ணத்தோடும் வாழ்ந்தார்கள்.* கிறிஸ்து சிலுவையிலே அவர்களுக்கு முன்மாதிரியைக் காட்டியிருந்தார்; அவர்கள் அந்த முன்மாதிரியின்படி வாழ வகைதேடினர். கிறிஸ்து எல்லாருக்கும் இரட்சிப்பைக் கொடுக்கும்படி மரித்தபடியால், மற்றவர்களுக்கு ஊழியம் செய்வதன் மூலம் அவருக்கு கீழ்ப்படிவதை குறிக்கோளாகக் கொண்டிருந்தனர். புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவர்களுக்கு, அவர்களின் ஊழியப் பணிக்கும், தனிப்பட்ட பரிசுத்தத்துக்கும், ஊழிய வாழ்வுக்கும் சிலுவை தூண்டுகோலாயிருந்தது.

*சிலுவை அவர்களுடைய வாழ்க்கையில் மையம் வகித்தபடியால் அவர்கள் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார்கள்.* அவர்கள் எங்கு போனாலும், பாவமன்னிப்பிற்காக மரித்த கிறிஸ்துவின் நற்செய்தியைச் சொன்னார்கள். சிலுவையின் செய்தி முழு உலக குற்றங்களையும் அறிவித்தது; இருந்தும், அதே வேளையில், நம்பிக்கையையும் அறிவித்தது. சிலுவை அவர்களை இரட்சித்தது, மற்ற ஜனங்களையும் இரட்சிப்புக்குள் கொண்டுவரும் விருப்பத்தை அது அவர்களுக்குள் உண்டாக்கியது. மேலும், மற்றவர்கள் எப்படி இரட்சிக்கப்பட முடியும் எனக்காட்டியது.

முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்களின் வாழ்க்கையில் இருந்தது போலவே இன்று சிலுவை நமது வாழ்க்கையில் மையம் வகிக்கவேண்டும். நாம் அதை பிரசங்கிக்கவும் போதிக்கவும் வேண்டும், அது எவைகளைப் போதிக்கிறதோ அவைகளைக் கைக்கொள்ள வேண்டும். சிலுவை உண்மையிலேயே நம்முடைய மையமாக இருக்குமானால், நாம் என்ன செய்வோம்? (1) நம்மை பரிசுத்தப்படுத்தும்படி கிறிஸ்து மரித்தார் என்பதையறிந்து, நாமும் பரிசுத்தமாயிருக்க முயற்சிப்போம். (2) சிலுவையின்மேல் கிறிஸ்து தமது கீழ்ப்படிதலின் பெரிய முன்மாதிரியைக் காட்டியுள்ளபடியால், நாமும் கீழ்ப்படிதலுள்ளவர்களாயிருப்போம். (3) இயேசு நம்மையும் மற்றவர்களையும் இரட்சிக்கும்படியாக மரித்தபடியால், நாம் சுவிசேஷ ஊழியம் செய்வோம். (4) அவர் தம்மை முழுமையாய் நமக்கு கொடுத்தபடியால், நாம் கர்த்தருக்கு அதிகமாய் கொடுப்போம். ஆச்சரியமிகுந்த, கிறிஸ்துவின் தெய்வீக அன்பு சிலுவையின்மேல் காட்டப்பட்டது. அது ''என் ஆத்துமாவையும், என் வாழ்வையும், என்னுடைய எல்லாவற்றையும்'' கேட்கிறது.[3]

# முடிவுரை

உங்கள் வாழ்வின் மையமாக சிலுவையை வைப்பீர்களா? அப்படிச் செய்ய வேண்டுமானால், சிலுவை உண்மையானது என்று உங்களுக்குத் தெரிய வேண்டும். உங்கள் இருதயத்திலும் மனதிலும் கொல்கொதாவுக்கு இயேசுவோடு போங்கள். அவரின் முதுகில் விழும் வாரின் அடியை மறுபடியும் மறுபடியும் கேளுங்கள். சிலுவைபாரத்தின் கீழ் தடுமாறி அவருடன் விழுங்கள். முள்முடியின் கூரிய முட்களால் குத்தப்படுவதை அனுபவியுங்கள், அவருடைய கை கால்களின் மாம்சத்தின் வழியாக கடாவப்படும் ஆணியின் வலியை உணருங்கள். தாம் அறிந்திருந்தும் ஏற்று அனுபவித்த சிலுவையின் உஷ்ணம், ஆறுதல் அற்றதன்மை, மற்றும் வேதனைகளை அறிந்து உணருங்கள்; அவர் உணர்ந்த வலியை நீங்களும் உணருங்கள். அவர் மரணத்தில் சிந்தின இரத்தத்தைத் தொட்டுப் பாருங்கள். நீங்கள் இயேசுவோடு கூட கொல்கொதாவில் இருந்திருப்பீர்களானால், சிலுவை உண்மையானதாய் இருக்கும்.

ஒவ்வொரு கிறிஸ்தவனும் அவனோ அவளோ தன் வாழ்க்கையில் சிலுவையை மையமாக வைத்தால் கர்த்தருடைய சபை என்னே பெரிய காரியங்களை சாதிக்கக் கூடும்! மறுபடியும் உலகத்தை நாம் கலக்க இயலும்! நாம் உள் மனதிலிருந்து, "யுத்தம் செய்வோம், வாரீர், கிறிஸ்து வீரரே, இயேசு சேனை கர்த்தர் பின்னே செல்வோமே"[4] எனப்பாடுவோம். நாம் தேவசேனையாக நினைத்துக்கூட பார்த்திராத (கனவில் கூட கண்டிராத) பெரிய வெற்றிகளை நோக்கி தொடர்ந்து முன்னேற முடியும்!

---

குறிப்புகள்

[1]கிறிஸ்துவுக்கு அப்படியொரு புகழுரையை தவிர்க்கும் பொருட்டு, வல்லுனர்கள் "B.C.E." ("before the Common Era") C.E. ("Common Era") "B.C." (before Christ) "A.D." (*anno Domini,* Latin for "in the year of the Lord"). "C.E." என்று குறிப்பிட்டு நன்கு அறிந்த "B.C.E." ("Common Era") "A.D." **"கி.பி." (கிறிஸ்துவுக்குப் பின்")** என்ற குறிப்பை மாற்றினர். எந்த வகையிலும், தேதிக் குறியீடுகள் பின்னோக்கியும் முன்னோக்கியும் கணக்கிடப்படுவது கிறிஸ்துவின் பிறப்பை தோராயமாக வைத்தே தேதிகள் கணக்கிடப்பட்டது. (உலகில் இன்று வேறு வகை குறியீட்டு முறையில் தேதிகள் உலகில் பயன்படுத்தப்படுகிறது.) [2]William Cowper, "There Is a Fountain," *Songs of Faith and Praise*, comp. and ed. Alton H. Howard (West Monroe, La.: Howard Publishing Co., 1994). [3]Isaac Watts, "When I Survey the Wondrous Cross," *Songs of Faith and Praise,* comp. and ed. Alton H. Howard (West Monroe, La.: Howard Publishing Co., 1994). [4]Sabine Baring - Gould, "Onward, Christian Soldiers," *Songs of Faith and Praise,* comp. and ed. Alton H. Howard (West Monroe, La.: Howard Publishing Co., 1994).